## மாநில உரிமைக்கு எதிரான குரல்!

அருந்ததியினருக்கான உள் இட ஒதுக்கீடு சட்டம் தொடர்பாக தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளில், உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அமர்வு உள் இட ஒதுக்கீடு செல்லும் என தீர்ப்பு அளித்துள்ளது. இது திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான வெற்றி என தமிழ்நாடு முதலமைச்சர் வரவேற்பு தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இந்த விவகாரத்தில் மீண்டும் விவாதங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக கௌதம் ராஜ் தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவு இது.

“1969-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அதன் வழி 1970-இல் வெளியான ‘சட்டநாதன் அறிக்கை’, தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருந்த இட ஒதுக்கீடு முறையில் பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டது.

அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இரண்டு திருத்தங்களை மேற்கொள்கிறார். பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 25 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாகவும் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 16 சதவிகித்திலிருந்து 18 சதவிகிதமாகவும் உயர்த்தும் வகையில், திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்தார்.

சட்டநாதன் அறிக்கை கிரீமிலேயரை அமல்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருந்தது, கலைஞர் இந்தப் பரிந்துரையை ஏற்கவில்லை, செயல்படுத்தவும் இல்லை. ஆனால், பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரைக்காத பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீட்டையும் உயர்த்தி வழங்கினார், கலைஞர்.

இட ஒதுக்கீடு முறையில் மாற்றம் மேற்கொள்ள, மாநில அரசுகளுக்கு உரிமை இல்லை என்று, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் எழுப்பும் குரல் மாநில உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானது, கூட்டாட்சித் தத்துவத்தில் மாநிலங்களின் வலுவை மேலும் குன்றச் செய்யவே இது போன்ற குரல்கள் வழிவகுக்கும்.”

## ஃப்ளாஷ்பேக்


தமிழ்ச்செல்வன்



### தலைவர் தலைமையில் திருமணம்!

சென்னை பெரியார் திடலில், 04/01/1976 அன்று என் தந்தை பெரம்பூர் கந்தன் - தாய் ராதா இணையருக்கு மார்கழி மாதம் ஞாயிற்றுக்கிழமை ராகு காலம் மாலை 4:40 மணிக்கு சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் மணியம்மையார் தலைமையில், இத்திருமணம் நடைபெற்றது. ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். எங்கள் குடும்பத்திற்கே பெரும் பொக்கிஷமாகத் திகழ்கிறது இப்புகைப்படம்.

– **தமிழ்ச்செல்வன்,**
**தகவல் தொடர்பு அலுவலர்,**
**சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### “தீர்மானத்தை அனுப்பி வைக்கவும்!”

1950-ஆம் ஆண்டு, ஜூன் 24 மற்றும் 25 தேதிகளில் ‘வட ஆற்காடு மாவட்ட தி.மு.கழக முதல் மாநாடு’ ஆரணியில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா நடிக்கும் ‘சந்திரமோகன்’ நாடகம் நடைபெறும் என வரவேற்புக் குழு சார்பில், விளம்பரம் செய்யப்பட்டது. கழகத்தின் அனைத்து கிளைக் கழகங்களும் மாநாட்டுக்குத் தீர்மானம் அனுப்பக் கோரியும், தொண்டராகப் பணியாற்ற விரும்பும் தோழர்களுக்கு அழைப்பு விடுத்தும், ஜூன் 17 ‘மாலைமணி’ இதழ் செய்தி வெளியிட்டது.

# சீரணி ⟹ இளைஞர் அணி

**24**

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்



## வேம்படிதாளத்தில் சீரணி!


*பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி காலமானார். அதைத் தொடர்ந்து அந்த ஆண்டு அக்டோபர் 14-ஆம் தேதிக்குள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் அண்ணாவின் பெயரில், ஒரு பள்ளிக் கட்டடம் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. அதன்படி, தமிழ்நாடு முழுவதும் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுப் பணிகள் நடந்தன.*

*அந்தத் தருணத்தில், 1970-ஆம் ஆண்டு மார்ச் மாத ‘சீரணி’ இதழில், சீரணி அமைப்பின் தனி அலுவலர் க.பரமசாமி, சேலம் மாவட்டத்தில், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரணிப் பணிகள் குறித்து, ‘வேம்படிதாளத்தின் வியத்தகு சாதனை’ என்ற தலைப்பில் செய்திக் கட்டுரையை எழுதியிருந்தார். அதில் சொல்லப்பட்டிருந்ததாவது:*

*“சீரணி செயற்படுத்திய அற்புதத் திட்டங்களை நாடு நன்கறியும். அச்சாதனைக்கே சிகரம் வைத்தாற்போல் தனிப்பட்டு நிற்கும் சில கிராமங்கள், ஊராட்சிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் வேம்படிதாளம் என்னும் கிராமம்.*

**சீரணி அமைப்பினர், பள்ளிகள் கட்டுவது, சாலைகள் சீரமைப்பது போன்ற பணிகளைத்தான் பெரும்பாலும் மேற்கொண்டு வந்தனர்.**

*சேலம் மாவட்டத்தில் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஓர் ஊர்தான் வேம்படிதாளம். தமிழ் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஊர்களில் இதுவும் ஒன்று, அப்படியிருக்க இவ்வூரின் சிறப்புதான் என்ன?*



*மற்ற ஊர்களைப்போல் இதுவும் ஒன்றாக இருக்குமானால், பத்தோடு இதுவும் ஒன்று என்று எண்ணி இருந்துவிடலாம். ஆனால், அத்தகைய நிலையில் இவ்வூர் இல்லை. ‘பின் என்னதான் செய்திருக்கிறது?’ என்று அவசரமாகக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?*

*கல்வித் துறையில், ஆரம்பப் பள்ளிக்கான 5 கட்டடங்களும், பொது மக்களின் நன்கொடையான ரூ.50,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 800 மாணவர்கட்குக் கல்வி நல்கும் அரும்பணியாற்றி வருகிறது. உயர்நிலைப் பள்ளிக்கென ரூ.18,000 நன்கொடை வசூலித்து, 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.*

*மருத்துவத்துறையில், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் இயங்கும் மருத்துவமனை மற்றொரு சாதனையாகும். இதற்கான சுமார் ஒன்றரை இலட்ச ரூபாயும் பொது மக்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டதாகும்.*

*குடிநீர்ப் பிரச்சினைக்கு முடிவுகட்ட 2 சமுதாயக் கிணறுகள் பொது மக்களின் முழுஒத்துழைப்பினால் மட்டுமே வெட்டப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் சிறப்புப் பங்கேற்றிருக்கிறது.”*

*சீரணி அமைப்பினர், பள்ளிகள் கட்டுவது, சாலைகள் சீரமைப்பது போன்ற பணிகளைத்தான் பெரும் பாலும் மேற்கொண்டு வந்தனர். மருத்துவமனை ஒன்றுக்காக ஒன்றரை இலட்சம் ரூபாய் திரட்டினார்கள் என்பது அந்தக் காலத்தில் மிகப் பெரிய சாதனையாகவே தெரிகிறது. அதற்கு முன்பு வரை மருத்துவ மனை சார்ந்து சீரணியினர் நிதி திரட்டியதாகவோ அல்லது பணிகளை மேற்கொண்டதாகவோ பதிவுகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.*

*இதில் என்ன விசேஷம் என்றால், அங்குள்ள அரசு மருத்துவ மனையில், ஆர்.பெருமாள் செட்டியார், கே.எம்.சென்ன கிருஷ்ண செட்டியார், கே.எம். சித்துராம செட்டியார், கே.அர்த்த னாரி செட்டியார் ஆகியோரின் நினைவாகக் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை 1967-ஆம் ஆண்டு மே 19 அன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார். அன்றிலிருந்து அந்த மருத்துவமனை ‘அண்ணா மருத்துவமனை’ என்று அங்குள்ள மக்களால் அறியப்படுகிறது.*

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

**24**

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**




## ‘குடி’ப்பெருமைக்காரர்களின் உளறல்கள்!

***கல்லூரி மாணவர்களுக்கான ’புதுமைப் பெண்’ , ’நான் முதல்வன் ’ ஆகிய திட்டங்களில் அளிக்கப்படும் நேரடி பணப் பயன்கள் பயனில்லை என சிலர் புலம்ப தொடங்கி யுள்ளனரே...?***

இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய முன்னோடியான திட்டங்களை அறிவித்து, செயல்படுத்துவதில் முத்தமிழறிஞர் கலைஞரைப் போலவே ஆற்றல் மிக்க முதலமைச்சராகத் திகழ்கிறார், கழகத் தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அவருடைய தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன் தருவதுடன், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைந்துள்ளன. மக்களின் பேராதரவுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் திட்டங்களை விமர்சித்தால், அதனால் பயன் பெறும் மக்களே ‘திருப்பிக் கொடுப்பார்கள்’ என்பதை உணர்ந்திருக்கும் எதிர்க்கட்சிகள், அந்தத் திட்டங்களின் பயன்களைத் திசை திருப்பும் வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

அண்மையில், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ‘தமிழ்ப்புதல்வன் திட்டம்’ மாணவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்பது துணையாக இருக்கிறது. அதுபோலவே, மாணவிகளுக்கான புதுமைப்பெண் திட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களை, திசை திருப்புவதற்காக, மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் ‘பள்ளி மாணவிகள்’ அந்தப் பணத்தில் மது அருந்துவதாகவும், இதனால் தமிழ்ப் பண்பாடு கெட்டுப் போவதாகவும் ஒரு காணொளியை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டு, இதுபோலத்தான் ‘பள்ளி மாணவர்களுக்கு’ தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் வழங்கக்கூடிய பணமும் டாஸ்மாக் கடைக்குப் போகும் என்று கருத்துகளைப் பதிவிடுகிறார்கள்.

உண்மையில், இந்தத் திட்டங்களின் வாயிலாகப் பள்ளி மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதில்லை. அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் சேர்ந்த மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு ‘தமிழ்ப்புதல்வன் திட்டம்’ ஆகும். இந்த அடிப்படையைக்கூட தெரியாமல், உணராமல், பள்ளி மாணவிகளிடம் மதுப்பழக்கம் என்று 2021-ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பு, அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்டு, பல முறை பதிவிடப்பட்ட ஒரு காணொளியை இப்போது சுற்ற விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**இந்த உண்மையை அறியாமல், உளறிக் கொண்டிருக்கிறார்கள் ‘குடி’ப்பெருமை கொண்ட உதிரிகள்.**


மகளிர் உரிமைத் தொகையை மாதச் சேமிப்பாக்கி, அதைக் கூட்டுறவு வங்கிகளில் சேமித்து ஒரு சதவிகிதக் கூடுதல் வட்டி பெறுகிறார்கள் தமிழ்நாட்டுப் பெண்கள், என்று அண்மையில் வெளியான ஆய்வு தெரிவிக்கிறது. இந்த உண்மையை அறியாமல், உளறிக் கொண்டிருக்கிறார்கள் ‘குடி’ப்பெருமை கொண்ட உதிரிகள்.

...வினா தொடரும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**571**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131